# St. Xavier's College (Autonomous)

(Recognized as "College with Potential for Excellence" by UGC &
Accredited at A++ grade with CGPA of 3.66/4 in IV Cycle by NAAC)

**Palayamkottai – 627 002**

---

## ANNUAL REPORT 2023-2024

### அன்னை தெரசா விடுதி ஆண்டறிக்கை

தூய சவேரியார் கலைமனைகளில் முக்கியமான அங்கமாய்த் திகழ்கிறது அன்னை தெரசா மகளிர் விடுதி. எமது விடுதி துவங்கப்பட்டு 13 வருடங்கள் மனமகிழ்வோடு கடந்திருக்கிறது. அன்னை தெரசா விடுதி நூறு ஆண்டுகளை கல்விப் பணிக்காக அர்ப்பணித்திட்ட தூய சவேரியார் கல்லூரியில் ஆர்வத்தோடு பயில வரும் எண்ணற்ற மாணவிகளின் கனவுக் கோட்டையாய் விளங்குகிறது இந்த விடுதி. மாணவிகள் தங்கள் வீட்டில் இருந்து தங்கிபடிப்பது போன்ற உணர்வினையும், அவர்களுக்கு தேவையான பராமரிப்பையும், பாதுகாப்பையும் வழங்கிவருகிறது இந்த அன்பு இல்லம்.

1. **இலக்கு பயணம் செய்யும் விடுதியாய்.....**

இறைவனின் அளவு கடந்த அருளாலும் ஆசிராலும் எம் விடுதி மாணவிகள் ஒவ்வொருவரும் இறைபக்தி கல்வி ஒழுக்கம் தெய்வபயம் உளரீதியான மனப்பான்மை வாழ்க்கைக்கு தேவையான திறமைகள் வேலை வாய்ப்பிற்கான திறமைகள் போன்றவற்றில் எம் மாணவிகள் முழு வளர்ச்சி அடைந்து தனிமனித சுதந்திரத்தோடு வாழவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு எம் விடுதி செயல்பட்டு வருகிறது.

2. **அன்பு உள்ளங்களின் வழிகாட்டுதலில்....**

புனித அன்னை தெரசாள் மாணவியர் விடுதியின் இயக்குநராக கடந்த 5 ஆண்டுகள் கனிவோடும் கருணையோடும் கண்டிப்போடும் வழிநடத்துபவர் அருட்சகோதரி சிசிலி jmj அவர்கள். அவரின் அன்பு வழிகாட்டலிலும் இவ்விடுதியின் துணை இயக்குநராக சிறப்போடு பணிபுரியும் செல்வி ஜாஸ்மின் அவர்களுடைய தன்னலமில்லா பணிகளாலும் மகிழ்வோடு பயணிக்கிறது எமது விடுதி.

3. **விடுதியை மெருகூட்டும் வசதிகள்.....**

மாணவிகளுக்கு மழைக்காலங்களில் உதவியாக இருக்க sunshade போடப்பட்டுள்ளது. விடுதியின் முன்புறத்தில் வண்ண கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. விடுமுறை நாட்களில் மாணவிகள்

விளையாடுவதற்கு விளையாட்டு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மாணவிகளுக்கு தேவையான மருந்துமாத்திரைகள் வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடுதியில் மாணவிகள் மனமகிழ்வான இருப்பை உறுதி செய்ய எமது கலைமனைகளின் அதிபர் தந்தை அவர்களின் மாதந்திர கலந்துரையாடல் பல மெருகூட்டும் வசதிகளையும் மாணவிகளுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளிக்கிறது,

4. **ஒழுக்கத்துடன் கூடிய கல்விக்காக**

- மாணவிகள் விடுதியின் ஒழுங்கு முறைகளையும் விடுதிப் பொறுப்பாளர்களின் வழிகாட்டுதலையும் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.
- கத்தோலிக்க கிறித்தவ மாணவிகள் நம்பிக்கையில் வேருன்றிட தினமும் காலைத் திருப்பலிக்குச் செல்ல உற்சாகப்படுத்தப்படுகிறது.
- பிற கடவுள் நம்பிக்கை கொண்டுள்ள மாணவிகள் அனைவரும் தினமும் காலையில் யோகா செய்ய வழிவகை செய்யப்படுகிறது.
- மாணவிகளின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் மாதத்திற்கு இருமுறை மட்டும் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்படுகிறது,
- கைப்பேசிகளை மாணவிகள் பொறுப்புணர்வோடு பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.
- மாணவிகளை சந்திப்பதற்கு மாணவிகளின் பெற்றோர் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்

5. **எண்ணிக்கையில் ஒரே குடும்பமாய்…..**

இந்த ஆண்டு காலைநேரக் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை 76. மாலை நேரக் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை 94. மொத்தம் 153 மாணவிகள் எமது விடுதியில் தங்கிப் பயில்கின்றனர். இதில் 90 பேர் கத்தோலிக்க கிறிஸ்துவ மாணவிகள்.

6. **தலைமைப் பொறுப்புகளில் எமது மாணவிகள்**

Shift I – செல்வி A. Maria Anusiya மூன்றாம் ஆண்டு இயற்பியல் துறை

Shift II – செல்வி S. Saniya மூன்றாம் ஆண்டு பொருளியல் துறை.

Shift III – செல்வி J. Persis மூன்றாம் ஆண்டு வணிக நிர்வாக துறை

இவர்கள் மாணவிகள் விடுதியின் விதிமுறைகளை சிறப்பாகச் கடைபிடிக்க உதவுகின்றனர்.

7. **உறவுகளைப் பலப்படுத்திய தருணங்களில் சில…..**

- 16.05.2023 அன்று எம் விடுதியில் உள்ள உழைப்பாளர்கள் இன்ப சுற்றுலாவாக கொடைக்கானல் சென்று வந்தார்கள்.
- 01.07.2023 அன்று இளங்கலை முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு வரவேற்பு விழா நிகழ்த்தப்பட்டது. இவ்விழாவில் தூய சவேரியார் கலைமனைகளின் அதிபர் தூய சவேரியார் கல்லூரியின் செயலர் தந்தை மற்றும் முதல்வர் தந்தை ஆகியோர் கலந்து கொண்டனர்.

- ஒவ்வொரு மாதமும் வாரம் ஒரு நாள் தூய சவேரியார் கல்லூரி பேராசிரியர்கள் அவர்களால் எமது மாணவிகளுக்கு ஜெபம் மற்றும் வாழ்க்கைச் சிந்தனைகள் பற்றிய கருத்தமர்வுகள் நடத்தப்பட்டது.
- 28.11.2023 அன்று எம் விடுதியில் தீபாவளி திருநாள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.
- 19.12.2023 அன்று கிறிஸ்துமஸ் திருவிழா கொண்டாடப்பட்டது. அதிபர் தந்தை மற்றும் அருட்சகோதரி கலையரசி வருகை தந்து கிறிஸ்து பிறப்பு நற்செய்திகளை அளித்தார்கள்.
- 07.01.2024 அன்று பொங்கல் விழா நடைபெற்றது.
- 22.01.2024 அன்று விடுதியின் இல்ல விழாவை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் நடுவர்களாக சேசுசபை அருட்தந்தையர்கள் பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.
- 11.02.2024 அன்று கல்லூரி ஆலயத்தில் லூர்து அன்னையின் திருவிழாவை முன்னிட்டு திருப்பலியும் தேர்ப்பவனியும் நடைபெற்றது. அதில் விடுதி மாணவிகள் பக்தியோடு பங்கு கொண்டார்கள்.